அனுப்புநர்:
திரு. ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை மாவட்டம்.

பெறுநர்:
முதன்மைச் செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.

ந.க. NC1/ 21798 /2020 நாள்: 22 .02.2022

அய்யா,

பொருள்: பேரிடர் மேலாண்மை - ஆப்தமித்ரா திட்டம்- சிவகங்கை மாவட்டம் - ஆப்தமித்ரா திட்டத்தின்கீழ் தன்னார்வலர்களுக்கு பயிற்சியளிக்க பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்து அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை: முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக வாட்ஸ்அப் செய்தி நாள்: 22.02.2022

சிவகங்கை மாவட்டத்தில் ஆப்தமித்ரா திட்டத்தின் கீட் 300 தன்னார்வலர்களுக்கு 12 நாட்கள் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி அளிக்க பயிற்சி நிறுவனங்களைத் தேர்வு செய்து அறிக்கை அனுப்பி வைக்கும்கும்படி கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான பயிற்சியளிக்க TNSMART வலைத்தளத்தில் "RAANVETTAI" என்ற பயிற்சி நிறுவனம் பதிவு செய்திருந்ததையடுத்து, அப்பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர் திரு.கென்னடி ஆறுமுகம் என்பவரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டதில் அந்நிறுவனம் தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் செயல்படவில்லை என்ற விபரத்தைத் தெரிவித்தார். எனவே, இப்பயிற்சி நிறுவனத்தை களஆய்வு செய்து அறிக்கையை பதிவேற்றம் செய்ய இயலவில்லை என்ற விபரத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கிவரும் TRUPA என்ற பயிற்சி நிறுவனத்தை புலத்தணிக்கை செய்ததில் ஒரே நேரத்தில் 60 நபர்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் உள்ளது என்பதையும் கள ஆய்வு செய்து அறிக்கையை இத்துடன் இணைத்தனுப்பியுள்ளேன் என்ற விபரத்தினை தெரிவிப்பதுடன் TRUPA பயிற்சி நிறுவனம் TNSMART வலைத்தளத்தில் பதிவு செய்யவில்லை என்ற விபரத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு: பயிற்சி நிறுவனம் - களஆய்வு அறிக்கை

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட ஆட்சியருக்காக,
நேர்முக உதவியாளர் (பொது),
சிவகங்கை.

22-2-22

Scanned with CamScanner